செ. கு. எண்: 010 நாள்: 17.01.2018

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 17.1.2018

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், அச்சிறுபாக்கம் சரகம், ஆத்தூர் கிராமம் அருகே, சென்னையிலிருந்து திருவண்ணாமலை நோக்கி சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து சிற்றுந்தின் மீது மோதியதில், சிற்றுந்தில் பயணம் செய்த, புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் வட்டம், செம்பாட்டூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கருப்பையா என்பவரின் மனைவி திருமதி பிரபாவதி, திரு.செல்வராஜ் என்பவரின் மனைவி திருமதி தமிழ்ச்செல்வி, திரு. மோகன் என்பவரின் மனைவி திருமதி ராதிகா, திரு. முருகையா என்பவரின் மகன் திரு.தினேஷ் மற்றும் திரு. சின்னராஜா என்பவரின் மகன் திரு. இளம்பிரிதி ஆகிய ஐந்து நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், வரப்பாளையம் கிராமம், கிழுவங்காட்டுத் தோட்டம் அருகில், திருப்பூர்-தாராபுரம் நெடுஞ்சாலையில் திருப்பூரிலிருந்து மதுரை நோக்கி சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து, பழனிக்கு பாதயாத்திரை சென்று கொண்டிருந்த பக்தர்கள் மீது மோதியதில், திருப்பூர் மாவட்டம், முருங்கப்பாளையத்தைச் சேர்ந்த திரு. கோபால்சாமி என்பவரின் மனைவி திருமதி மகேஸ்வரி, குமார் நகரைச் சேர்ந்த திரு. சிதம்பரம் என்பவரின் மகன் திரு.நடராஜ், திரு. ஜெயபிரகாஷ் என்பவரின் மனைவி திருமதி சாந்தி, செட்டிபாளையத்தைச் சேர்ந்த திரு.ராஜேந்திரன் என்பவரின் மனைவி திருமதி விஜயா, அவிநாசியைச் சேர்ந்த திரு. அவிநாசியப்பன் என்பவரின் மனைவி திருமதி ராஜாமணி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூரைச் சேர்ந்த திரு.ரவி என்பவரின் மகன் திரு. காளிமுத்து ஆகிய ஆறு நபர்கள் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்துக்களில் அகால மரணமடைந்த **11** நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட சாலை விபத்துக்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**